# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.52/2023** **நாள் :08.07.2023**

**<u>சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள தரவு மையத்தில் (Data Centre) பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் 10.07.2023 மாலை 6.00 மணி முதல் 11.07.2023 காலை 8.00 மணி வரை இணையதள சேவைகள் செயல்படாது</u>**

**<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>**

சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள தரவு மையத்தில் (Data Centre) பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் 10.07.2023 மாலை 6.00 மணி முதல் 11.07.2023 காலை 8.00 மணி வரை இணையதள வழியாக பெறப்படும் சேவைகளாகிய குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி செலுத்துதல், கட்டணம் செலுத்தி லாரிகள் மூலம் பெறப்படும் குடிநீர் (Dial for Water), புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு விண்ணப்பித்தல், தலைமை அலுவலக கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் ஆகிய அனைத்து சேவைகளும் செயல்படாது. மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு தினசரி லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டு 11.07.2023 காலை 8.00 மணி முதல் இணையதள சேவைகள் அனைத்தும் வழக்கம் போல் இயங்கும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்